O.S.No. 123/2010
14.02.2020

பி.வா.சா.1.திரு. பொன்னுபாண்டி,த.பெ. பாண்டி

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை .

நான் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி எனது சகோதரின் மனைவி என்றால் சரிதான். இந்த வழக்கு பற்றிய விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 1ம் வாதி பழனிக்குமாருக்கு 2 முதல் 5 வாதிகள் சகோதரிகள் என்றால் சரிதான். பழனிக்குமாரின் தந்தை பெயர் பெரிய கருப்பனன் என்றால் சரிதான். தாவா சொத்தின் புல எண் என்னவென்றால் 80/5. அந்த புல எண் மட்டும் தான தாவா சொத்து என்றால் சரிதான். புல.எண் 338/31 சொத்தை பற்றி எனக்கு எந்த பாத்தியமும் இல்லை என்றால் அது பழைய புல.எண் ஆகும், தற்போதைய புல.எண் 80/5. தாவா சொத்தின் வடபுறம் யார் உள்ளார்கள் என்றால் மச்சக்காளை, தென்புறம் என்ன உள்ளது என்றால் பழனிக்குமாரின் வீடும், காலி இடமும் உள்ளது. மேல்புறம் என்ன உள்ளது என்றால் மச்சக்காளை மற்றும் எங்கள் கிணறு உள்ளது. தாவா சொத்து எனக்கு பூர்வீக பாத்தியப்பட்டதாக எனது எதிர் வழக்குரையில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து எவ்வாறு பூர்வீக பாத்தியம் என்றால் என் அப்பா வழி பாத்தியம். என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் மொத்தம் 3 பேர், பெண்மக்கள் யார் என்றால் வெள்ளையம்மாள், முனியம்மாள், சீதை, கச்சம்மாள் ஆகியோர். பி.வா.சா.ஆ 1 எனது சகோதரர் சுப்பிரமணி பெயரும் எனது சகோதரிகள் பெயரும் குறிப்பிடவில்லை என்றால் சகோதரர் சுப்பிரமணி 1987 லிலேயே ஊரை விட்டு சென்று விட்டார், எங்கள் சொத்து என்பதால் எங்கள் சகோதரிகளை சேர்க்கவில்லை. தாவா சொத்து பாண்டியின் மக்கள் அனைவருக்கும் பாத்தியம் உண்டு என்றால் சரிதான். என் அப்பாவுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 3 பேர், பாண்டி, துரைப்பாண்டி, ராம். என் தாத்தா பெயர் சுப்பையா என்றால் சரிதான். வழக்கு சொத்து சுப்பையாவிற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். சுப்பையாவிற்கு பாண்டி, துரைப்பாண்டி, ராம் வாரிசுகள் என்றால் சரிதான். ராமிற்கு எத்தனை மகன்கள் என்றால் மகாமணி, தேவராஜ், அம்பலம். துரைப்பாண்டிக்கு எத்தனை மகன்கள் என்றால் 2 பேர் ஆசை, ராசா. பூர்வீக சொத்து என்றால் அவர்களுக்கும் பாத்தியம் உண்டு என்றால் சரிதான், ஆனால் அவர்களுக்கு இந்த இடத்திற்கு பதிலாக வேறு சொத்து கொடுத்துவிட்டோம். அவ்வாறு சொத்து கொடுத்தற்கு ஆவணம் ஏதேனும் உண்டா என்றால் வாய்க்கரலாக தான் கொடுத்தோம். சுப்பையாவின் தந்தை பெயர் வீரணன் அம்பலம் என்றால் சரிதான். வீரணம் அம்பலத்திற்கு 2 வாரிசுகள் என்றால் சரிதான். வீரணனின் மகன் நாராயனுக்கு வாரிசு உண்டா என்றால் அவரது மகன் பழனிச்சாமி மற்றும் பழனிச்சாமியின் மகன் ரவி ஆகியோர் உள்ளனர். நாராயனின் வாரிசுகளுக்கும் தாவா சொத்தில் பங்கு உண்டா என்றால் இல்லை. அவர்களுக்கு பாகமாக சொத்து கொடுத்ததற்கு ஆவணங்கள் கிடையாது என்றால் வாய்க்கரலாக தான் கொடுத்தோம். வா.சா.ஆ 1 ஆவணத்தில் வீரணம் அம்பலத்தின் தந்தை பெயராக வீரணன் என்று தான் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரியல்ல, வீரணனின் தந்தை பெரிய கருப்பன் ஆகும். வா.சா.ஆ 1 ஆவணத்தில் வீரணனின் தந்தை பெயர் வீரணன் என்று குறிப்படிப்பட்டுள்ளது என்றால்

O.S.No. 123/2010

14.02.2020

பி.வா.சா.1.திரு. பொன்னுபாண்டி,த.பெ. பாண்டி

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

சரிதான். வா.சா.ஆ 1ல் பெரிய கருப்பன் என்ற பெயரே இல்லை என்றால் சரியல்ல. எனது மூதாதையர் பெயர் பெரிய கருப்பன் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா. ஆ 5ல் 1. பெரிய கருப்பன், நாட்டாண்மை, வெள்ளையன், வீரணன், மீனாட்சி, வே.சுப்பிரமணியன் மற்றும் மீனாட்சி ஆகியோர் பெயரில் கூட்டுப்பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 5ல் இரண்டு நபர்கள் பெயர் மீனாட்சி என்று குறிப்பிடப்பட்டுள்ள போது நான் என் எதிருரையில் மீனாட்சி என்று ஒரு நபரை மட்டும் தான் குறித்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 5ல் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு மீனாட்சி என் தாத்தா சுப்பையாவின் மனைவி என்றால் சரிதான், மற்றொரு நபரான மீனாட்சி வாதியின் பெரிய தாத்தா பழனிவேலின் மனைவி என்றால் தெரியாது. நாட்டாண்மை என்ற பெயர் வாதியின் பரம்பரை பெயர் என்றால் நாட்டாண்மை என்பது பழனிக்குமாரின் தாத்தா ஆவார். என் வயது என்னவென்றால் 61. மிராஸ் நாட்டாண்மை என்ன என்றால் தெரியாது. 1ம் வாதியின் தந்தை, 1ம் வாதியின் மூத்த சகோதர், 1ம் வாதியின் தாத்தா அவர்கள் தான் மிராஸ் நாட்டாண்மை என்றால் தெரியாது. பதினெட்டான்குடியில் எங்கள் வகையறாவிற்கு என்ன பெயர் என்றால் பெரிய கருப்பன் வகையறா ஆகும், அது தவறு என்றால் சரியல்ல. வாதி எனக்கு மைத்துனர் முறை என்றால் சரிதான். வாதியின் வகையறா நாட்டாண்மைகாரர் வகையறா என்று நடைமுறையில் கூப்பிடுவது வழக்கம் என்றால் எங்கள் தாத்தா நாட்டாண்மை ஆவார், அவர்கள் வகையறாவை அவ்வாறு தான் கூப்பிடுவார்கள். தாவா சொத்திற்கு பி.வா.சா.ஆ 5 ஐ தவிர வேறு மூல ஆவணங்கள் கிடையாது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வரி விதிக்கப்பட்டதா என்றால் மொத்த பட்டாவில் வரி விதிக்கப்பட்டது, அந்த வரி விதிப்பை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தநதை பெயரில் இருந்த வரி விதிப்பை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. தாவா சொத்து எங்களுக்கு பாத்தியம் என்பதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். தாவா சொத்தின் பட்டா பழனிக்குமார் பெயரக்கு மாறிய விவரம் எப்போது தெரியும் என்றால் என் மகள் திருமணத்தின் போது சொத்தை விற்க முயன்ற போது எனக்கு தெரிய வந்தது, எந்த வருடம் என்றால் 2000ம் வருடம். வாதி பழனிக்குமார் வழக்கிடை சொத்தை அளக்க படி கெட்டி சென்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அவ்வாறு அளக்கவில்லை. வா.சா.ஆ 6 தாவா சொத்தை அளப்பதற்கு படி கெட்டியதற்கான ரசீது என்றால் அந்த ஆவணம் தயார் செய்யப்பட்டது. வா.சா.ஆ 6க்கு பிறகு தான் தாவா சொத்தை என் பெயருக்கு மாற்ற மனு கொடுத்தேன் என்றால் சரிதான். அதற்கு முன்னால் என் அப்பாவோ, தாத்தாவோ பட்டாவை மாற்ற மனு கொடுக்கவில்லை என்றால் அவர்களுக்கு இந்த விவரமே தெரியாது. பட்டா மாறுதல் விசாரணைக்கு வட்டாட்சியர் என்னை அழைத்திருந்தார் என்றால் சரிதான். வட்டாட்சியர் முன்னிலையில் நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

O.S.No. 123/2010

14.02.2020

பி.வா.சா.1.திரு. பொன்னுபாண்டி,த.பெ. பாண்டி

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.
வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

வட்டாட்சியர் யாரை விசாரித்தார் என்றால் ரவி , சுப்பிரமணி, சேது, தனபால் ,வீரணன் ஆகியோரை விசாரித்தார். (வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க பி.வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)